| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AKHBAR** | **:** | **MALAYSIA NANBAN** | **MUKA SURAT** | **:** | **4** |
| **TARIKH** | **:** | **18 JANUARI 2022** | **HARI** | **:** | **SELASA** |
| **SENTIMEN :** | | **POSITIF** | | | |

# பி.டி.பி.டி.என் வழங்கும் ஒரு லட்சம் வெள்ளி அங்பாவ் சிறப்புப் பரிசு



கோலாலம்பூர், ஜன. 18- பிப்ரவரி முதல் தேதியன்று சீனப் புத்தாண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது. இதனை முன்னிட்டு கொங்சி அங்பாவ் என்ற சிறப்பு அங்பாவ் பரிசு நிகழ்ச்சிக்கு பி.டி.பி.டி.என். ஏற்பாடு செய்துள்ளது.

இதன் கருப்பொருள் நாள்தோறும் கட்டாயம் சேமிப்போம். மகிழ்வும் வளமும் இணைந்தே செல்ல வேண்டும். சீனப்புத்தாண்டு விமரிசையாக கொண்டாடப்பட வேண்டும். பரிவும் பாசமும் பல இன மலேசியர்கள் மத்தியில் மலரவேண்டும்.

Gong Xi Ang Pow 2022 என்ற இயக்கம் இம்முறை மாநில அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு லட்சம் வெள்ளியை வெற்றியாளர் பரிசு பணமாக பெறுவதற்கு இது வகை செய்கிறது.

எஸ். எஸ். பி.என். முதலீட்டாளர் இந்த பரிசு போட்டியில் பங்கேற்கும் போது கவர்ச்சிகரமான வெகுமதிகளை பெறுவதோடு பல்வேறு பலன்களை பெறுவதற்கும் வகை செய்யப்படுகிறது.

ஊக்குவிப்பான டிவிடெண்ட் தொகை, தக்காபுல் காப்புறுதி, ஒரு வருடத்திற்கு எட்டாயிரம் வெள்ளி வரையிலான வருமான வரி விலக்கு சலுகை ஆகிய அனுகூலங்களை பெறலாம்.

பெருநாள் காலங்களில் எஸ்எஸ்பிஎன் சேமிப்பு திட்டத்தை தேர்வு செய்யும் விசுவாசமான முதலீட்டாளர்களுக்கு வழங்கும் அனுகூல அங்கீகாரம் இது. தற்போது நடத்தப்பட்டு வரும் இயக்கம் முதலீட்டாளர்களுக்கு ஒரு தன்முனைப்பு இயக்கமாக விளங்கும். மலேசிய குடும்பம் என்ற உன்னத தத்துவத்திற்கு ஏற்ப சீனப் புத்தாண்டு எஸ்எஸ்பிஎன் திட்டத்தில் முதலீடு செய்துள்ள அனைவரும் இதில் பங்கேற்கலாம்.

இந்த இயக்கம் ஒரு மாத காலம் நடைபெறும் அதாவது ஜனவரி மாதம் 15ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி வரை நடைபெறும்.

ஒவ்வொரு மாநிலமும் எட்டு வெற்றியாளர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசுப் பொருட்களை வழங்குகிறது.

விவேக தொலைக்காட்சி பெட்டி, மடக்கி வைத்துக் கொள்ளும் சைக்கிள், ஆறுதல் பரிசாக அங் பாவ் 388 வெள்ளி போன்ற ஊக்குவிப்புகள் இதில் அடங்கும்.

இந்த பரிசு திட்டத்தில் பங்கேற்க வேண்டுமானால் முதலீட்டாளர் 50 வெள்ளி சேமிப்பில் சேர்த்தாலே போதும். இதனால் இயல்மாகவே இவருக்கு ஒரு குலுக்கலுக்கான வாய்ப்பு ஏற்படும்.

கொண்டாட்டம் பல இன சமுதாயத்தில் நல்லுறவை போற்றும்.

கோங்சி அங் பாவ் இயக்கம் மற்றும் எஸ்எஸ்பிஎன் சேமிப்பு இயக்கம் சம்பந்தமான விவரங்களை பெற www.lovess spn. com என்ற அகப்பக்கத்தை வலம் வரலாம்.

**TRANSLATION:**

The National Higher Education Fund Corporation (PTPTN) is offering attractive prizes worth almost RM100,000 to all National Education Savings Scheme (SSPN) depositors through its 2022 Gong Xi Ang Pow campaign. PTPTN in a statement, said the campaign, starting on Saturday (Jan 15) until Feb 15, is in conjunction with the Chinese New Year celebration and in appreciation of depositors who are loyal to SSPN. Themed 'Gong Xi Simpan, Kongsi Ong! Hari-Hari Mesti Mau Simpan Tau!? eight winners for each state would be picked to win, among others, smart televisions, high pressure cookers and folding bicycles other than consolation prizes in the form of a RM388 ang pow. According to PTPTN, depositors needed only have savings as low as RM50 during the campaign and would qualify to get one draw automatically to participate in the campaign. In the meantime, depositors would also enjoy various SSPN saving benefits provided such as competitive dividends, takaful protection and income tax relief of up to RM8,000 per year. Further details on the 2022 Gong Xi Ang Pow campaign, opening an SSPN saving account and topping up savings are available at the website www.lovesspn.com.